# மதுரை மாநகராட்சி
# மாண்புமிகு மேயர் தலைமையில் நடத்தப்படும்
# மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்
# 25.01.2023-ந் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1. F1/00347/2020**

தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி துறையில் பணிபுரியும் C மற்றும் D பிரிவு பணியாளர்களுக்கு 2021-2022-ஆம் ஆண்டிற்கு சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்கி அரசாணை (நிலை) எண்.373, நிதித்துறை (படிகள்) நாள்:26.12.2022-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் C மற்றும் D பிரிவு பணியாளர்களுக்கு ரூ.3000/- வீதமும் தொகுப்பூதிய மற்றும் தினக்கூலிப் பணியாளர்களுக்கு ரூ.1000/- வீதமும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் (பொங்கல் போனஸ்) வழங்கிய அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : இதற்கான உத்தேச செலவினம் ரூ.69.14 இலட்சம்

**மாமன்றத்தீர்மானம் எண்: 142**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2. F1/27462/2012**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு நிதித்துறை அரசாணை (நிலை) எண்.7 நாள்:06.01.2023-ன் பிரகாரம் அரசு ஊழியர்களைப் போல 01.01.2023 முதல் அகவிலைப்படி 34% சதவீதத்திலிருந்து 38% சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கிய அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : இதற்கான உத்தேச ஒரு மாத செலவு ரூ.33.00 இலட்சம்

**மாமன்றத்தீர்மானம் எண்: 143**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3. F8/000482/2023**

மதுரை மாநகராட்சியில் தற்போது ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு 01.01.2023 முதல் 34% அகவிலைப்படியானது 38% ஆக உயர்த்தி வழங்குவதற்கு வெளியிடப்பட்ட அரசாணை எண். 10 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்:06.01.2023–ஐ மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 144**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4. F8/000297/2023**

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற 'C' மற்றும் 'D' ஓய்வூதியதாரர்கள் 1515 நபர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்கள் 1460 நபர்களுக்கும் **2021-2022-**ம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகை ரூ.500/-ஐ வழங்க வெளியிடப்பட்ட அரசாணை (MS) எண்.374 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்:26.12.2022–ஐ மாமன்றத்தின் பார்வைக்கும், மேற்கண்ட ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப

ஓய்வூதியதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகை ரூ.500/- வீதம் வழங்கப்பட்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

மொத்த செலவினத் தொகை ரூ.14,87,500/-

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 145</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>5. H1/011637/2022</u>**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளிலும் உள்ள முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த வெளிப்புறங்களில் புகைப்பரப்பு பணி மேற்கொள்வதற்கு Malathion Technical Grade 95% கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.KINGSUN ENIVRO PRIVATE LIMITED., நிறுவனத்திற்கு 26.10.2022ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி Malathion Technical Grade 95% கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.8,58,450/- பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 146</u>**

**பின்னேற்பு செய்து <u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>6. H1/006953/2022</u>**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளிலும் முதல்நிலை குப்பை சேகரிப்பு பணி மேற்கொள்வதற்கு ஐந்து மண்டலங்கள் மூலம் குப்பைகள் அகற்றுவதற்கும் பாதாள சாக்கடைகளில் தேங்கும் குப்பைகளை அகற்றவும் மற்றும் மேற்பார்வையாளர்களாகவும் என தூய்மை பணியாளர்கள் குழுக்களாக பிரிந்து பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்கண்ட பணியாளர்களுக்கு தேவையான தளவாடச் சாமான்களை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் மிகக் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. VRG Constructions. Pvt.Ltd., என்ற நிறுவனத்திற்கு 10.10.2022-ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி தளவாட சாமான்களை கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.16,38,915/-+GST 18% பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 147</u>**

**பின்னேற்பு செய்து <u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>7. MH1/006088/2022</u>**

மதுரை மாநகராட்சியில் கீழ்க்கண்டவாறு சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

1. அனுப்பானடி ஆயுர்வேத மருந்தகம்
2. யானைக்கல் சித்தா மருந்தகம்
3. காமராஜர் சாலை சித்தா மருந்தகம்
4. நரிமேடு சித்தா மருந்தகம்
5. ஒர்க்ஷாப் ரோடு ஆயுர்வேத மருந்தகம்

மேற்கண்ட ஐந்து சித்தா மற்றும் ஆயுர்வேதா மருந்தகங்களில் நோயாளிகளுக்கு தேவையான மாத்திரைகள், மருந்துகள், சூரணங்கள் ஆகிய மருந்து பொருட்களை M/s.Impcops என்ற உற்பத்தி நிறுவனத்திடமிருந்து 2021-22ம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. அனுப்பானடி ஆயுர்வேத மருந்தகம் ரூ.4,49,939-
2. யானைக்கல் சித்தா மருந்தகம் ரூ.4,49,926-
3. காமராஜர் சாலை சித்தா மருந்தகம் ரூ.4,49,948-
4. நரிமேடு சித்தா மருந்தகம் ரூ.4,49,984-
5. ஒர்க்ஷாப் ரோடு ஆயுர்வேத மருந்தகம ரூ.4,49,888-

ஆக மொத்தம் ரூ.22,49,685/-

மேற்படி மருந்துகளை M/s.Impcops என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், கொள்முதல் செய்யப்பட்ட மருந்துகளுக்கு பொது நிதியிலிருந்து தொகை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 148**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8. H1/000834/2023**

தமிழர் திருநாள் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து தூய்மை பணியாளர்கள், பாதாள சாக்கடை அகற்றும் பணியாளர்கள் மற்றும் அனைத்து வகையான ஒட்டுனர்களுக்கு வண்ண சீருடைகள் வழங்க வேண்டியுள்ளதால் அனைத்து தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து வகை ஒட்டுனர்கள், பாதாள சாக்கடை பணியாளர்களுக்கு அவசர அவசியம் கருதி நேரடியாக விலைப்புள்ளி பெற்று வண்ண சீருடைகள் வழங்கவும், தொகை ரூ.11,81,181/- (ரூபாய் பதினொறு லட்சத்து எண்பத்து ஒன்றாயிரத்து நூற்று என்பத்து ஒன்று மட்டும்) வழங்கியமைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 149**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9. H1/000810/2023**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் ஐந்து மண்டல அலுவலக பகுதிகளுக்கு தூய்மை பணிகளை மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு முறையில் சப்ளை செய்யும் பணிக்கு 2229 பணியாளர்களுக்கு பொது நிதியின் கீழ் 17 (பதினேழு) சிப்பங்களாக பிரிக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டு செயல்முறை ஆணையின்படி 2022-23ஆம் நிதியாண்டில் நிர்ணயித்த ஊதிய அடிப்படையில் நியமிக்கலாம். இதற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், டெண்டர் நோட்டீஸ் மற்றும் மதிப்பீட்டுடன் இணைந்த குறிப்பு மற்றும் டெண்டர் நடவடிக்கைகள் மைய பொறியியல் பிரிவு மூலமாக மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 150**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10. E7/011972/2022**

மதுரை மாநகராட்சி வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை வெள்ளக்கல் குப்பை சேகரிக்கும் நிலையத்தில் உள்ள குப்பைகளை பிரிக்கும் இயந்திரமான (100MM Trommel Feeding Conveyor Machine, 32MM, 16MM, மற்றும் 4MM) ஆகிய இயந்திரங்களை சரி செய்யும் பணிக்கு ரூ.**24.50/–** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 03.11.2022 அன்று ஆணையாளர் அவர்களால் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க மாமன்றத்தின் முன் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 151**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11.E1/014029/22 -23**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட 5 மண்டலம் மற்றும் மையபொறியியல் பிரிவிற்கு தேவையான தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் 3 மாதங்களுக்கு 52 தொழில்நுட்ப உதவியாளர்களை சப்ளை செய்ய பொதுநிதியின் கீழ் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு கீழ் கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No. | File No | Description | Packages | No of labours Person | | Day | 90 days | Rate | Amt /3 Month | EPF 13% | ESI 3.25% | SC 7% | GST 18% | Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | E 1 / 014029 / 22 -23 | Technical Assistant (52 persons) | Pac-1 | 40 | x | 90 | 3600 | 878 | 31,60,800.00 | 163800 | 40950.00 | 221256.00 | 39826.08 | **36,26,632.08** |
| | | | Pac-2 | 12 | x | 90 | 1080 | 878 | 9,48,240.00 | 140400 | 35100.00 | 66376.80 | 11947.824 | **12,02,064.62** |
| | | | | | | | | | Total | | | | | **48,28,696.70** |

மேற்கண்ட விலைவிகிதத்தில் 3 மாதங்களுக்கு 52 தொழில்நுட்ப உதவியாளர்களை வெளிகொணர்வு முறையில் பொதுநிதியின் கீழ் 2 சிப்பங்களாக பிரித்து சப்ளை செய்திட ஒப்பந்தம் கோருவதற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 152**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12. E4/014027/22 -23**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட 5 மண்டலம் மற்றும் அண்ணாமாளிகைக்கு தேவையான காவலர்கள் வெளிக்கொணர்வு முறையில் 3 மாதங்களுக்கு 17 காவலர்களை சப்ளை செய்ய பொதுநிதியில் கீழ் கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No. | File No | Description | No of labours nos | days | Rate | Amt /3 Month | EPF 13% | ESI 3.25% | SC 7% | GST 18% | Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | E 4 / 014027 / 22 -23 | Security (17 person) | 17 x 90= | 1530 | 548 | 8,38,440.00 | 99450 | 24862.50 | 58690.80 | 10564.344 | **10,32,007.64** |

மேற்கண்ட விலைவிகிதத்தில் 3 மாதங்களுக்கு 17 காவலர்களை வெளிகொணர்வு முறையில் பொதுநிதியின் கீழ் சப்ளை செய்திட ஒப்பந்தம் கோருவதற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 153**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13. E2/014026/22- 23**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட 5 மண்டலம் மற்றும் மையபொறியியல் பிரிவிற்கு தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் 3 மாதங்களுக்கு 431 தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை சப்ளை செய்ய பொதுநிதியின் கீழ் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு கீழ் கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | File No | Description | Packages | No of labours | | Rate | Amt /3 Month | EPF 13% | ESI 3.25% | SC 7% | GST 18% | Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | nos | days | | | | | | | |
| 1 | E 2 / 014026 / 22- 23 | ZONE 1 (21 x 4 = 84) | Pac-1 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.26 | 15,87,923.06 |
| | | | Pac-2 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.26 | 15,87,923.06 |
| | | | Pac-3 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.26 | 15,87,923.06 |
| | | **84** | | | **7560** | 507 | **38,32,920.00** | **4,91,400.00** | **1,22,850.00** | **2,68,304.40** | **48,294.79** | **47,63,769.19** |
| 2 | | ZONE 2 (21 x 4 = 84) | Pac-1 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | | Pac-2 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | | Pac-3 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | **84** | | | **7560** | **507** | **38,32,920.00** | **4,91,400.00** | **1,22,850.00** | **2,68,304.40** | **48,294.79** | **47,63,769.19** |
| 3 | | ZONE 3 (19 x 4 = 76) | Pac-1 | 24 x 90= | 2160 | 507 | 10,95,120.00 | 140400 | 35100.00 | 76658.40 | 13798.512 | 13,61,076.91 |
| | | | Pac-2 | 24 x 90= | 2160 | 507 | 10,95,120.00 | 140400 | 35100.00 | 76658.40 | 13798.512 | 13,61,076.91 |
| | | | Pac-3 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | **76** | | | **6840** | | **34,67,880.00** | **444600** | **111150** | **242751.6** | **43695.288** | **43,10,076.89** |
| 4 | | ZONE 4 (18 x 4 = 72) | Pac-1 | 24 x 90= | 2160 | 507 | 10,95,120.00 | 140400 | 35100.00 | 76658.40 | 13798.512 | 13,61,076.91 |
| | | | Pac-2 | 24 x 90= | 2160 | 507 | 10,95,120.00 | 140400 | 35100.00 | 76658.40 | 13798.512 | 13,61,076.91 |
| | | | Pac-3 | 24 x 90= | 2160 | 507 | 10,95,120.00 | 140400 | 35100.00 | 76658.40 | 13798.512 | 13,61,076.91 |
| | | **72** | | | **6480** | | **32,85,360.00** | **421200** | **105300** | **229975.2** | **41395.536** | **40,83,230.74** |
| 5 | | ZONE 5 (21 x 4 = 84) | Pac-1 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | | Pac-2 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | | Pac-3 | 28 x 90= | 2520 | 507 | 12,77,640.00 | 163800 | 40950.00 | 89434.80 | 16098.264 | 15,87,923.06 |
| | | **84** | | | **7560** | | **38,32,920.00** | **4,91,400.00** | **1,22,850.00** | **2,68,304.40** | **48,294.79** | **47,63,769.19** |
| **6** | | Central Unskilled - 31 | Pac-1 | 31 x 90= | 2790 | 507 | 14,14,530.00 | 181350 | 45337.50 | 99017.10 | 17823.078 | 17,58,057.68 |
| | | | | | **38790** | | **1,96,66,530.00** | **25,21,350.00** | **6,30,337.50** | **13,76,657.10** | **2,47,798.28** | **2,44,42,672.88** |

மேற்கண்ட விலைவிகிதத்தில் 3 மாதங்களுக்கு 431 தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் பொதுநிதியின் கீழ் 6 சிப்பங்களாக பிரித்து சப்ளை செய்திட ஒப்பந்தம் கோருவதற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 154**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**இடம்: மதுரை**
**நாள்: 25.01.2023**

**(ஒம்..) திருமதி. வ.இந்திராணி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**